
## இயல் 7.5 வடிவியல்

பயிற்சி எண் :: 7.5.2.4.F

வடிவியல் (Geometry) - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 5.6.16-17

## வடிவியல் (Geometry) - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 5.6.16-17

16. வண்டிகள் நிறுத்தும் இடத்தில் இடைவெளிகளைக் குறிக்கும் கோடுகள் இணையாக உள்ளன. $\angle 1 = (2x - 3y)^\circ$, $\angle 2 = (x + 39)^\circ$ எனில், $x$ மற்றும் $y$ இன் மதிப்பைக் காண்க.




- கணக்கில் கொடுக்கப்பட்டுள்ள இணைகோடுகளுக்கு இடையில் அமைந்துள்ள 3 கோணங்களும் சிவப்பு நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.
- $\angle ABC$-யும் $\angle 3$-ம் குத்தெதிர் கோணங்கள், சமம். எனவே, $\angle 3 = 65^\circ$.
- $\angle 3$-ம் $\angle 4$-ம் ஒத்த கோணங்கள். அவை சமம். எனவே, $\angle 4 = 65^\circ$.
- $\angle 2$-ம் $\angle 4$-ம் நேரிய கோண இணைகள். எனவே;


$$\begin{aligned} \angle 2 + \angle 4 &= 180 \\ \angle 2 &= 180 - \angle 4 \\ \angle 2 &= 180 - 65 = 115^\circ \\ x + 39 &= 115 \\ x &= 115 - 39 \\ &= 76^\circ \end{aligned}$$

- அதேபோல், $\angle 1$-ம் $\angle 3$-ம் ஒத்த கோணங்கள். எனவே, $\angle 1 = 65^\circ$.

$$\begin{aligned} 2x - 3y &= 65 \\ -2x + 3y &= -65 \\ 3y &= 2x - 65 \\ 3y &= 2 \times 76 - 65 \\ 3y &= 152 - 65 = 87 \\ y &= \frac{87}{3} = 29^\circ \end{aligned}$$

$x$ = $\boxed{76^\circ}$ மற்றும் $y$ = $\boxed{29^\circ}$ ஆகும்.

17. இரு இணைகோடுகளைக் குறுக்கு வெட்டி வெட்டும்போது கோணங்கள் $A$ மற்றும் $B$ என்பவை ஒத்த கோணங்களாக அமைகின்றன. $\angle A = 4x$ மற்றும் $\angle B = 3x + 7$ எனில், $x$ இன் மதிப்பைக் காண்க. விளக்குக.




ஒத்த கோணங்கள் சமம் ஆகும்.

$$\begin{aligned} \therefore \angle A &= \angle B \\ 4x^\circ &= 3x^\circ + 7^\circ \\ 4x^\circ - 3x^\circ &= 7^\circ \\ x^\circ &= 7^\circ \end{aligned}$$

$x^\circ$ - ன் மதிப்பு = $\boxed{7^\circ}$ ஆகும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/UpmJkMm-n04


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 16th January, 2023 :: 18:52 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**